ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2437/ 47 - 2025 මැයි මස 23 වැනි සිකුරාදා - 2025.05.23**

2437/47 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 94/47 (viii) B

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**
**6(2)(ஆ) மற்றும் 21(2)(ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை**

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவாலும் மற்றும் 21(2)(ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரான அநுர கருணாதிலக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம்,-

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "ரெம்பிட்ட புரான ரஜமஹா விஹாரை புனித பிரதேசம்" என அழைக்கப்படும் காணி இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன்; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்டதான "ரெம்பிட்ட புரான ரஜமஹா விஹாரை புனித பிரதேசம்" பௌதிக உருவரை வரைபடமொன்று திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**அநுர கருணாதிலக்க,**
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு,
மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2025, மார்ச்சு 16.

## அட்டவணை

### சீகல ரெம்பிட்ட புராண ரஜமஹா விஹாரை புனித பிரதேச இடப்பரப்பினைக் கொண்ட பிரதேசம்

தென் மாகாணத்தில், ஹம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்திலுள்ள, வீரகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, இலக்கம் 392, புத்தியாகம கிராம அலுவலர் பிரிவினுள், ஹதமுனே, மெதகம கிராமத்தில் அமைந்துள்ள, மாரகஹவத்த மறுபெயர் உடஹவத்த, பிங்ஹேன மற்றும் ஹீகஹ கொரட்டுவ மறுபெயர் சீகல ரெம்பிட்ட புராண ரஜமஹா விஹாரை அமைந்துள்ள காணி என்னும் காணிக்குரிய நில அளவையாளர் தலைமையதிபதியின் 2023 யூன் மாதம் 28 ஆந் திகதியைக் கொண்ட சுவடுத்திட்ட இலக்கம் HA/WRK/2023/12 என்பதில் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறாக காணித்துண்டு இல. B எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறான பரப்பளவில் ஹெக்டெயர் 3.0718 விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான அக்காணியின் இடப்பரப்பு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு:-

துண்டு B -

வடக்கே : துண்டு A இ.கி.வ.233 இன் துண்டு இலக்கம் 5 மற்றும் துண்டு D;

கிழக்கே : துண்டு D இ.கி.வ. 233 இன் துண்டு இலக்கம் 5, 7 மற்றும் இ.கி.வ.242 இன் துண்டு இலக்கம் 3;

தெற்கே : துண்டு D இ.கி.வ. 233 இன் துண்டு இலக்கம் 5, 7 மற்றும் இ.கி.வ.242 இன் துண்டு இலக்கம் 3 மற்றும் வீதி;

மேற்கே : வீதி, துண்டு A இ.கி.வ. 233 இன் துண்டு இலக்கம் 5.

EOG 05-0144